**செய்தி வெளியீடு எண்: 735** **நாள்:06.10.2020**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களை 5.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், 2018–19ஆம் ஆண்டிற்கான தேசிய நாட்டு நலப்பணித்திட்ட விருதுகளை பெற்ற காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் திரு. K.T. லோகநாதன் மற்றும் திருச்சிராப்பள்ளி, பிஷாப் ஹீபர் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் திரு. M. தர்ம சாஸ்தா ஆகியோர் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

சிறப்பாக பணியாற்றும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட அலுவலர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்களுக்கு, தேசிய நாட்டு நலப்பணித்திட்ட விருதுகள் ஆண்டுதோறும் மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 24.9.2020 அன்று புதுடில்லியில் நடைபெற்ற மெய்நிகர் விழாவில் (Virtual Ceremony) மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்கள், 2018–19ஆம் ஆண்டிற்கான தேசிய நாட்டு நலப்பணித்திட்ட விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் திரு. K.T.லோகநாதன் அவர்களுக்கு விருது தொகையான 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், கோப்பை, பதக்கம் மற்றும் சான்றிதழையும், திருச்சிராப்பள்ளி, பிஷாப் ஹீபர் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர் திரு. M. தர்ம சாஸ்தா அவர்களுக்கு விருது தொகையான 1 லட்சம் ரூபாய், கோப்பை, பதக்கம் மற்றும் சான்றிதழையும் வழங்கி கௌரவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் திரு. K.T.லோகநாதன் மற்றும் திரு.M. தர்ம சாஸ்தா ஆகியோர் வாழ்த்து பெற்ற நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

திரு.கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ்குமார்,இ,ஆ,ப., மாநில நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. கே. விவேகானந்தன், இ,ஆ,ப., மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் ம. செந்தில்குமார், நாட்டு நலப்பணித் திட்ட சென்னை மண்டல இயக்குநர் முனைவர் சி. சாமுவேல் செல்லையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

• • • • •

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**